ஒடுக்குவதே ஞானானந்த யோகம் என்பது. இவ்வாறு சுழுமுனை நாடியின் இறுதியில் விளங்குகின்ற பிரம்மப்புழையை உணரத் தொடங்கும்பொழுது, குண்டலினியின் ஆற்றல் வளர்ந்தோங்குகிறது. இந்த ஆற்றலையே சித்தர் இலக்கியம் நீண்டு விரிந்த பாங்கிலே பற்பல உவமைகளோடு விளக்கிச் சொல்கிறது.

மனித உடம்பிலும் மூன்று மண்டலங்கள் உள்ளன. அவை சூரியன், சந்திரன், அக்கினி என்று பெயர் பெறுவன. இந்த மூன்று மண்டலங்களிலும் பொருந்திக்கொண்டு தூண்போன்று நிற்பதே உடம்பினில் உள்ள முதுகெலும்புத் தண்டாகும். இதை வீணாதண்டம் என்று சித்தர் இலக்கியம் பேசும். இந்த வீணாதண்டத்தின் அடியிலே குண்டலினி என்னும் ஆற்றல் தூங்கிக் கொண்டு இருக்கிறது. முதுகுத் தண்டின் வடிவம் பாம்பு போன்றது. அதன் முடிவாகிய பாம்பின் நாவிலே குண்டலினி ஆற்றல் துயில்கிறது. இந்தப் பேருண்மையை ஞானகுரு உணர்த்துகிறான். இதையே முதுகுத்தண்டாகிய தூணிலே தொங்கிக் கொண்டிருக்கின்ற பாம்பின் நாக்கு என்று கூறிக் குண்டலினி ஆற்றலைச் சித்தர்கள் உருவகப் படுத்துகிறார்கள்.

குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

குண்டலி என்னும் ஆற்றலானது முதுகுத் தண்டிலே தொங்குகின்ற பாம்பின் நாவிலே உள்ளது. அதை எழுப்பினால் அந்த ஆற்றலானது முதுகுத்தண்டின் வழியே மேலெழுந்து சென்று, உள்நாக்கு இயங்குகிற நிலையில் வந்து தொடுகிறது. இது சித்தர்களின் மிகப்பெரிய பயிற்சி முறையாகும்.

அசபை என்றால் ஜெபிக்க முடியாதது என்று பொருள்படும். அஜபா மந்திரம் என்பது உச்சரிப்பைக் கடந்த மோனமந்திரமாகும்.அது சொற்களைக் கடந்த அதிர்வுநிலை. வாயினால் சொல்ல முடியாத இந்த அதிர்வாகிய'வைபிரேஷ்'னை **(VIBRATION)** குருவானவன் வாயினால் சொல்லாமல், கையினால் தொட்டு அதிர்வெழும்படியாக அசைக்கச் செய்கிறான். இதுவே அஜபா தந்திரம் என்ற பயிற்சி முறை. இந்த அதிர்வை ஞானகுரு செய்து காட்டும்பொழுது, வீணாதண்டத்தின் அடியிலே அடைத்துக் கிடந்த ஆற்றல் விழித்தெழுந்து, வெளிக்கிளம்பி, மேலே செல்லத் தொடங்குகிறது. இந்த ஞானக் கல்வியைத்தான் பேசாத பேச்சு என்றும், அஜபா மந்திரம் என்றும் சித்தர் இலக்கியம் அழைக்கிறது.

குண்டலியில் கூடியிருக்கின்ற அசைபையாகிய அதிர்வை மேலெழும்பச் செய்வதே ஞானகுரு உணர்த்துகின்ற மூடு மந்திரம். அதன் இயக்கம் வெளிப்படையாகத் தொழிற்படத் தொடங்குவதால் அந்தப் பயிற்சி முறையின் உபதேசத்தை 'அசபை விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து' என்று அவ்வையார் பாடுகிறார்.

மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பும் கருத்தறி வித்தே

வீணா தண்டத்தின் அடியில் மூலாதாரத்தில் துயில்கின்ற ஆற்றல் கனல் போன்றது. அந்தக் கனலை மேலெழுப்பி, முதுகந் தண்டின்

வழியாக ஆற்றுப்படுத்துகின்ற சித்தர்களின் பயிற்சி முறையை, முதலாவது தொகுதியில் மூலக்கனல் என்ற தலைப்பிலே விரிவாக ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். அந்த இரகசியப் பயிற்சியாகிய சித்தர் கல்வியையே அவ்வையார் இங்கே குறிப்பிடுகிறார். இதையொட்டி உடம்பின் சில அடிப்படை இரகசியங்களை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

அ என்ற எழுத்து இடைநாடி. இது இடக்கண் பார்வையோடு பொருந்தியது.

உ என்ற எழுத்து பிங்கலை நாடி. இது வலக்கண் பார்வையோடு பொருந்தியது.

ம என்பது சிரசின் உச்சியிலே உள்ள அதிர்வுநிலை. இதுவே சுழுமுனை நாடியில் உள்ள ஆன்ம ஒளியாகும். இந்த இரகசியத்தையே சித்தர்கள் மூன்று மண்டலங்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

இனி மூலக்கனலைக் காலால் எழுப்புவது என்ற பயிற்சி உத்தியைப் பற்றி ஆயும்பொழுது, திருமூலருடைய திருமந்திரத்தை ஒப்பு நோக்குதல் பயனுடையதாகும்.

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே

இந்தத் திருமந்திரத்திற்குப் பொருள் சொல்லுகிற பல பெரியோர்கள், மூலக் கனலைக் காலால் எழுப்புவதே காலனைக் காலால் உதைக்கின்ற உத்தி என்றும், மரணமில்லாப் பெருவாழ்வுக்கு வழி என்றும் சொல்லி, திருக்கடவூர்த் தலத்தின் புராணக் கதையின் உருவகம் இதுவே என்று விளக்குகிறார்கள். சிவயோகி இரத்தின சபாபதியார் இந்த உத்தியைப் பற்றி விளக்கும்பொழுது கீழ்கண்டவாறு கூறுகிறார்:

"சுழுமுனை என்பது மூலாதாரத்திலிருந்து முதுகந் தண்டின் ஊடே இடைகலை பிங்கலை வழியே செல்லும் ஒரு நாடி. இடதுநாடி இடது கால் பெருவிரலிலும், பிங்கலா நாடி வலதுகால் பெருவிரலிலும் புகுந்து, குறி இரத்தாசயம் தாண்டி, சிரசின் உச்சியில் சுழுமுனா நாடியுடன் கலக்கிறது. இது மூன்று வட்டங்களாகச் சுற்றி, மேலே இரண்டு பாம்புகள் எதிர்முகமாய் நிற்பதுபோல், நாகப் பிரதிஷ்டையில் விளக்கப்பட்டிருக்கும். சிரசுக்குமேல் மூன்று நாடிகளும் ஒளிவடிவாகக் கலந்து பின்னிக் கொள்கின்றன. அங்கு நாடியற்ற ஆகாய வெளிப்பாதையும் உள்ளது".

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி

இந்த உடம்பினுள் உள்ள உயிர் இயக்க நிலைகள் சித்தர் இலக்கியத்தில் ஞான மையங்கள் என்ற சிறப்பைப் பெறுகின்றன. இந்த மையங்களை மாணவர்களுக்கு உணர்த்தி, இவற்றின் இயக்கத்தின் மூலமான ஆன்ம ஆற்றலை வளர்ப்பதே, சித்தர் இலக்கியம் தோன்றிய

தன் குறிக்கோளாகும். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, விநாயகர் அகவலில் உள்ள இனிவரும் வரிகளுக்கு, ஆன்ம முக்கியமும் பயிற்சி இரகசியத்தை உள்ளடக்கிய பெருமையும் உண்டு.

நித்திய வழிபாட்டிலே விநாயகர் அகவலை ஓதிவருகின்ற பக்தர்கள், மேலே வருகின்ற அகவற் பகுதியின் பொருளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. ஏனென்றால் இந்த அடிகளின் பொருள் வெறும் நிகண்டுப் பொருள் அன்று.

அவ்வையின் குறளிலும், ஞானசரநூல், அகத்தியர் ஞானம், ஆன்மயோகப் பயிற்சி முறைமை போன்ற சித்தர் இலக்கியங்களிலும், விரிவாகக் கூறுப்பட்டுள்ள ஞானக் கல்வியின் பயிற்சிமுறை தெரிந்தவர்களுக்கே, இந்த அடிகளின் பொருள் ஓரளவு புலனாகும். ஓரளவு என்று குறிப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால், கருத்தைப் புரிந்து கொள்வதோடு இந்த வரிகளின் உட்பொருள் அமைந்து விடுவதில்லை. அந்தக் கருத்துகளுக்கு நிலைக்களனாக உள்ள உடம்பின் ஞான மையங்களை, ஒரு சித்தன் நேர்முகமாக இருந்து தொட்டு உணர்த்தினாலன்றிக் குழப்பங்கள் ஏற்பட்டு, ஆன்ம நிலையங்களின் மைய வரிசை மாறிப் போய்விட இடமுண்டு. அப்படி மாறிவிட்டால் 'பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்த' கதையாகிவிடும்.

அவ்வையின் அகவலிலே உள்ள இந்தப் பகுதிக்குப் பொருள்கூற முனைகிற பெரியோர்கள், இந்த எச்சரிக்கையை முன்மொழிந்தே செய்யுளுக்குப் பொருள் சொல்லத் தொடங்குகிறார்கள். அப்படிச் சொல்லப்பட்டுள்ள பொருளின் அடிப்படையை ஓரளவு இங்கே ஆராயலாம்.

'அமுதநிலை' என்று இங்கே குறிக்கப்பெறுவது, உடம்பின்கண் உள்ள உயிர்ச்சுரப்பிகளிலிருந்து ஞானநீர் சுரந்து வருகிற மையத்தின் இருப்பிடத்தையே ஆகும். இந்த நிலையத்தைத் தெளிந்துணர்ந்து, இவ்விடத்திலே செய்ய வேண்டிய பயிற்சிகளை மேற்கொள்ளும் பொழுது, மரணமில்லா பெருவாழ்வுக்குரிய வாயில் திறக்கிறது.

'ஆதித்தன் இயக்கம்' என்பது இந்த உடம்பினுள் இயங்குகிற சூரியனின் தொழிலையே ஆகும். பிங்கலை நாடி, வலக்கண், வலது நாசி, உடம்பின் வலப்பகுதியில் உள்ள நரம்பு முடிச்சுக்கள், ஆகியவற்றிலே செயற்படுகிற சூரியனின் தொழிலே, ஆதித்தன் இயக்கம் எனப் பெயர் பெறுகிறது. இந்த ஆதித்தன் சித்தர்களின் மொழியிலே பிண்டாதித்தன் என்று பெயர் பெறுகிறான்.

'அண்டத்தில் உள்ளது பிண்டத்திலே' என்னும் சித்தர் மொழிக்கு ஏற்ப, புற உலகில் இயங்குகிற சூரியனைப் போன்று இந்த உடம்பாகிய அக உலகிலும் சூரியன் தொழிற்படுகிறான். இந்த உண்மையைத் தான் திருமூலர் போன்ற சித்தர்கள் அண்டாதித்தன் நிலை, பிண்டாதித்தன் நிலை என்று வேறு பிரித்துக் கூறுகிறார்கள்.

இனி, குமுத ச்சகாயன் என்ற தொடர் சந்திரனைக் குறிப்பது. சூரியன் தாமரையின் சகாயன் ஆவான். சந்திரன் குமுத சகாயன் ஆவான். தாமரை உதய மலர். குமுதன் அல்லில் (அல்-இரவு)

மலர்கின்ற அல்லிமலர். அல்லி என்ற சொல் 'அல்' என்பதன் அடியாகப் பிறந்தது. தாமரையைப் பகற்பூ என்றும், குமுதத்தை அல்லி என்றும் அழைப்பது இது காரணம் பற்றியே ஆகும்.

குமுத சகாயனாகிய சந்திரனின் இயக்கம் இடைகலை, இடக்கண், இடநாசி, உடம்பின் இடப்பக்கத்து நரம்பு முடிச்சுக்கள் ஆகிய மையங்களாம்.

ஞான குருவானவன் இந்த உடம்பின் நுட்பங்களை மாணவனுக்கு உணர்த்தும்பொழுது, இந்த உடம்பிலே அமுதம் விளைகிற பாற்கடல் எங்கிருக்கிறது என்பதையும், சூரியன் இயங்குகின்ற உடல் மையங்களையும், சந்திரன் இயங்குகின்ற மையங்களையும் கையினால் தொட்டுக் காட்டுகிறான். அப்படிக் காட்டும்பொழுது, உடம்பின் இடப்பக்கத்தில் இயங்குகின்ற சந்திரனுடைய பதினாறு கலைநிலைகள் மாணவனுக்குப் புலனாகின்றன. இதனைத்தான் அடுத்தவரி குறிப்பிடுகிறது.

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி

உடம்பின் இடப்பகுதியிலே உள்ள சந்திர நிலைகளாகிய பதினாறையும் உடம்பாகிய இயந்திரத்தின் ஐந்து கோசங்களையும், அவை பொருந்துகிற நுட்பங்களையும் ஞானாசிரியன் விளக்கிக் காட்டுகிறான். அதனோடு,

சண்முகத் தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி

'சண்முகம்' என்றது, ஆறு ஆதாரங்களாகிய ஆறு முகங்களை இந்த ஆறு ஆதார நிலைகளையும், அவற்றில் ஒளிர்கின்ற சூக்குமங்களாகிய நான்கு அந்தக் கரணங்களையும், எனது உடம்பின் வாயிலாகவே எனக்கு உணர்த்தி என்பது இந்த வரிகளின் பொருள்.

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

மனம், புத்தி, சித்தம், ஐம்புல நுகர்வுகள் ஆகிய அனைத்தும் இயைபு கொண்டுள்ள நுண்ணுடலை, ஆகாயதேகம் என்று சித்தர் இலக்கியம் அழைக்கிறது. இதையே 'புரியட்டகம்' என்று அழைப்பது சித்தர் மரபாகும். அட்டகம் என்பது எட்டின் தொகையாகும். அந்த எட்டாவன, தேகத்திலுள்ள ஏழு நிலைகளும், துவாதசாந்தமும் சேர்ந்தது. இத்தகைய புரியட்டகத்தைப் புலனாகும்படி செய்து, எட்டு நிலைகளையும் காட்டி, 'பிரம்மப்புழை' என்று அழைக்கப்படுகிற கபால வழியையும் திறந்துகாட்டி, அந்த நிலையிலே மாணவனாகிய என்னை நிலைநிறுத்தி, என் உடம்புக்குள்ளே நான் இதுவரை தெரிந்துகொள்ளாத நுட்பங்களை எனக்கு உணர்த்தி, அதாவது என்னை எனக்கு அறிவித்து, அந்தப் பேரின்பத்திலே என்னை நிலை நிற்குமாறு செய்து - என்பது இவ்வரிகளின் பொருள்.

இந்த பகுதியை நன்கு ஆராய்ந்து மிக அழகான, ஆழமான முறையிலே ஞானவிளக்கம் எழுதியுள்ளார் சிவயோகியார். இது பல நுட்பங்களைத் தன்னுள் பொதிந்து தருகிறது. அந்தப் பகுதியை அப்படியே கீழே தருகிறேன்:

சூரியனுடைய ஒளியில் சிவசக்தி என்ற மூலப்பொருள் கலந்துள்ளது. அதுவே உயிர்வாழ்வனவற்றிற்கெல்லாம் ஆதாரமாக உள்ளது. மூலப்பொருள் நமது தூலக் கண்ணுக்குப் புலப்படாமல் உள்ளது. நாம் காண்பது சூரியனின் ஒளியைத்தான். நாம், நம் உடலில் அம்மூலப் பொருளை ஏற்றுக்கொண்டே உயிர் வாழ்கிறோம். மனிதனிடம் குண்டலினி சக்தி, ஜீவசக்தி, இரண்டும், கவிழ்ந்துள்ள மூலாதாரத்தின் வழியாக வெளியிலிருந்து உள்புகுகின்றது. பிராண சக்தி மண்ணீரல் **(Spleen)** வழியாக உட்புகுகிறது. புகுந்து, அது அங்கு ஐந்து வாயுக்களாகப் பிரிந்து, உடலில் வெவ்வேறு இடத்தையடைந்து, வெவ்வேறான தொழில்களைச் செய்கின்றது.

இது மஞ்சள் ஒளியுடன் பொருந்தி, இரத்தாசயத்தையடைந்து, இரத்த ஓட்டம், சுவாசப்பை இவற்றின் வேலைகளை நடத்தும். தேகத்திற்கு மூச்சும் இரத்த ஓட்டமும் சூரியனொளியால் உண்டாவதால் அவன் சிறப்பொளி மஞ்சள் நிறம் ஆதல் பற்றி, இதன் இயக்கம் பொருந்திய நாடியைப் பிங்கலா (பொன்) நாடி என்று பெயரிட்டனர். வாயு பரிசத்தால் உணரப்படுவது. நாடி அந்த ஆற்றல்கொண்ட நரம்பாற்றலாகும். பிராண சக்தியின் ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு பெயரானபடியால், பிராண சக்தியின் ஒரு பிரிவே பிராணவாயுவாக இதயம் சுவாசப்பைகளில் தொழிற்படுகிறது. வலக்கண் ஒளியிலும் நாடியாக இயங்குகின்றது. தேகத்தின் இதயத்திற்கு அதிபராக உள்ளவரை 'அகோர ஹ்ருதயாய நம' என்று வலப்பக்கம் சிரசில் நியாசம் செய்கின்றனர்.

பஞ்ச வாயுக்களில் இரண்டாவது கிச்சிலிச் சிவப்பு நிறங் கொண்டது. அது மூலாதாரத்துட் சென்று, மலம், ஜலம், விந்து இவற்றை கழிக்கும். இதன் ஆதிக்கம் இடக்கண்ணில் இடாநாடியாக மூளைக்குச் செல்லுகிறது. அதனால் இடப்பக்க மூளையில் 'வாமதேவ குஹ்யாய நம' என்று நியாசம் செய்கின்றனர்.

மூன்றாவது, பச்சை நிறங்கொண்டது. அது நாபிச் சக்கரத்தில் (மணிபூரகத்தில்) வேலை செய்து, உண்ட அன்னத்தைச் சீரணிக்கச் செய்யும். இதன் ஆதிக்கம் நடுநெற்றியில் உள்ளபடியால், அந்த இடத்தில் 'தத்புருஷ வந்தராய நம' என்று மந்திரம் கொண்டு நியாசம் செய்கின்றனர்.

நான்காவதான உதானவாயு தொண்டைச் சக்கரத்தில் விளங்கிப் பேசும் சக்தியை யளிக்கிறது. இது நீலத் தடாகத்தில் நிலவொளி போல் உள்ளது. குண்டலினி குரு காட்டும் நெறியில் கண் பார்வை ஒன்றுபட்டு விளங்கும்போது, முகத்தின்முன் நீலவொளி விளங்கும். அப்போது சந்திரனாதிக்கம் பெற்றவராவர். அப்போது, சிரசில்நாத முழக்கமும் நீலவொளியும் விளங்கும். இதுவே பிரணவ உதிப்பின் அநுபவம் தொடங்கும் நிலையாகும். இந்த நிலை கைவரப்

பெற்றவர்க்கு வீரியம் காலக் கிரமத்தில் வற்றிப்போகும். இதுவே திருப்பாற்கடல் கடைந்த இரகசியமாகும். முன்னர்க் கருமையான ஒளியே பின்னர் நீலவொளியாக மாற்றமடைந்து, தேகத்திற்கு அமுத ஊற்றாக மாறுகிறது.

அண்டமோ டெண்டிசை தாங்கும் அதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே
- திருமந்திரம்

செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகலும் மனிதர்கள்
மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே
- திருமந்திரம்

ஐந்தாவதான வியான வாயு இளஞ்சிவப்பு நிறத்துடன் உடம்பு முற்றிலும் நரம்பாற்றலாக உள்ளது. இதன் ஆற்றலே தேகத்திற்கு வலுவை அளிக்கிறது.

மூளையின் வலுவும் வலுக்குறைவும் புருவ நடுவிலுள்ள வெற்றிச் சக்கரத்தைப் பொறுத்துள்ளன. இது நெற்றிக்கு நேரே ஒரு முழம் நீண்டவொளி காணும்போது, யோகியின் இச்சையுடம்பு மாற்றமடைவதைக் காணலாம். இந்த மாற்றத்தினால் ஆறாதாரங்களும் வளர்ச்சியுறும்:

பிரணா சக்தியின் பஞ்ச வாயுக்கள்

எண்	வாயு	நிறம்	மண்ணீரலிருந்து நோக்கிச் செல்லும் சக்கரம்	வேலை
1.	பிராணன்	மஞ்சள்	இதயம்	இரத்த ஓட்டம், சுவாசம்
2.	அபானன்	கிச்சிலிச் சிவப்பு	குதம், குய்யம்	மலம், ஜலம், விந்து பாகம் பண்ணல்
3.	சமானன்	பச்சை	நாபி	ஜீரணம்
4.	உதானன்	கருநீலம்	கழுத்து	குரல், பேச்சு
5.	வியானன்	இளஞ் சிவப்பு	மண்ணீரல்	நரம்பு, மூளை பண்படுதல்

இந்த திருஷ்டியில் சூரியவொளியில் விளங்கும் சிவசக்தியைச் சூக்ஷ்ம கண்ட முன்னோர்கள், சிவலிங்கமாக அமைத்து வழிபட்டனர். அதைச் சங்கேத குறியாக எழுத்தாலும் விளக்கினர். சூரியவொளியில் செங்குத்தாக இயங்கும் ஆற்றலுள்ள அணுக்களும், வட்டமாகப் பறந்து செல்லும் அணுக்களும் பொருந்திய சேர்க்கையாலே, உலகம் பல்வேறு வகையாகப் படைக்கப்பட்டுள்ளதென்பதைக் கண்டுள்ளனர். செங்குத்தாக மேலும் கீழும் சென்ற கொண்டிருப்பதை ஆண் அணு

வென்றும், வட்ட வடிவமாக மையத்தினின்றும் பிரிந்து சுற்றுவதைச் சத்தி என்றும் கண்டனர். இந்த அடிப்படையைக் கொண்டு தத்துவ உண்மையை விளக்கினர்.

அ என்றபோது சுழி, வட்டம், படுக்கைக் கோடு, செங்குத்துக்கோடு ஆகிய நான்கு உறுப்புகளும் ஒருங்கிணைந்துள்ளன. உ என்றபோது சுழியின் பகுதியும், படுக்கைக் கோடும்தான் உள்ளன. சுழியின், நேர்கோடும் அகரத்தில் அடங்கிவிடுவதால், 'சக்தி தொழிலறுதியானபோது, சிவத்தில் ஒன்றிவிடும்' என்றனர். சூரியன் ஒரேமாதிரியாக உள்ளவன் ஆதல் பற்றிச் சூரியனை உகாரம் என்ற சக்தியாக வழிபட்டனர். காயத்திரி தேவியின் ஆற்றலே பெரிய வைதிகர்களுக்காயிற்று. வைஷ்ணவர், காணும் சூரியனை நாராயணனின் தூல உருவென்கின்றனர். சைவர்களும் சதாசிவத்தின் தூல உடலைச் சூரியன் என்று கூறுகின்றனர்.

பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகலவ னாய்நின்ற புண்ணிய நாதன்
இகலற ஏழுல கும்முற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே
-திருமந்திரம்

ஆதித்தனுக்கு ஆதிகுருவென்று ஒரு பெயருண்டு. சக்தியாகவோ, சிவமாகவோ, விஷ்ணுவாகவோ, சூரியனாகவோ, அவ்வொளியை வழிபடில், அவரவர் ஜீவவொளியும் பெருகும் என்கிறார்.

ஆதித்தன் அன்பினோ டாயிர நாமமுஞ்
சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே - திருமந்திரம்

தானே யுலகுக்குத் தத்துவ னாய்நிற்கும்
தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்கும்
தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்கும்
தானே யுலகுக்குத் தண்சுட ராகுமே - திருமந்திரம்

மண்ணீரல் பகுதியிலிருந்து சுவாதிஷ்டானம் மூலாதாரம் வந்து, சிரசை அடையும் அண்டாதித்தனை யாரும் அறியமாட்டார்.

பாருக்குக் கீழே பகலோன் வருமவழி
யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே - திருமந்திரம்

குறிப்பு : பாருக்குக் கீழே பகலோன் வருமவழி என்பது சுழுமுனை நாடி. நீருக்கு தீக்கு நடுவே என்பது, மணிபூரகத்திற்கும் அநாகதத்திற்கும் இடையே உள்ள மண்ணீரல் ஆகும்.

கண்களில் செய்யும் கிரியைக்கும் தோத்திரத்திற்கும் இசைந்து, சிரசின் பகுதியில் வெளிப்படுவன.

மண்ணை யிடந்ததின் கீழொடும் ஆதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடும்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே - திருமந்திரம்

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்
ஊரை யுணர்ந்தார் உணர்ந்திருந் தாரே - திருமந்திரம்

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றாய நந்தி கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே - திருமந்திரம்

ஆதித்தன் ஓடி யடங்கும் இடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்
ஆதித்த னோடே யடங்குகின் றாரே -திருமந்திரம்

குறிப்பு : ஆதித்தனால் அடைந்த அறிவெல்லாம் சுட்டி அறியும் பிரபஞ்ச ஞானமே யாகும். சுட்டி அறிதலின் செயல் மடங்கினபோது, ஆதித்தனது நிலை முடிவுறும்.

உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து
சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை
சொருகிக் கிடக்கும் துறையறி வாளர்க்கு
உருகிக் கிடக்குமென் உள்ளன்பு தானே - திருமந்திரம்

வலப்புறச் சூரியனுக்கும் இடப்புறச் சந்திரனுக்கும் இடையில் ஆன்மா உள்ள நிலையாகும். இதுவே சகஸ்ரதள நிலையாகும். இது உள்ளத்தில் விளங்கும் ஆதித்தனாகும்.

எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரும்
எறிகதிர் சோமன் எதிர்நின் றெறிப்ப
விரிகதி ருள்ளே விளங்குமென் ஆவி
ஒருகதி ராகில் உவாவது வாமே - திருமந்திரம்

சந்திரன் சூரியன் தான்வரிற் பூசனை
முந்திய பானுவில் இந்துவந் தேய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்திற்
சிந்தை தெளிந்தார் சிவமாயி னாரே - திருமந்திரம்

சோமவொளி, சூரியவொளி, அக்கினியொளி (பிடரிக்கண்) மூன்றும் சேர்ந்ததே ஆன்மா. இம்மூன்றும் சேர்வதே உள்ளத்தின் பௌர்ணமியாகும்.

ஆகுங் கலையோ டருக்கன் அனல்மதி
ஆகுங் கலையிடை நான்கென லாமென்பார்
ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற
ஆகும்அப் பூரணை யாமென் றறியுமே - திருமந்திரம்

அவ்வொளி பூலோக புவர்லோக வொளிக்களுக்கப்பாற்பட்டது.

ஈரண்டத் தப்பால் இயங்கிய வவ்வெளி
ஓரண்டத் தார்க்கும் உணரா வுணர்வது
பேரண்டத் தூடே பிறங்கொளி யாய்நின்ற
தாரண்டத் தக்கா ரறியத்தக் காரே - திருமந்திரம்

ஒன்பதின் மேவி யுலகம் வலம்வரும்
ஒன்பது மீசன் இயலறி வாரில்லை
முன்பதின் மேவி முதல்வன் அருளிலார்
இன்ப மிலாரிருள் சூழநின் றாரே - திருமந்திரம்

இதன்மேல், சதாசிவ தத்துவ விளக்கம் கூறப்படுகிறது:

விந்து அபரம் பரமிரண் டாய்விரிந்
தந்த அபரம் பரநாத மாகியே
வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்
துந்தும் அருணோதய மென்ன வுள்ளத்தே - திருமந்திரம்

குறிப்பு: பரங்கலை யாதிவைத்து உந்தும் சாந்தியதீதகலை சிறப்புற்றபோது அதன் கீழான சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி முதலியனவும் அங்குச் சூக்குமமாய் இடம்பெறும் என்றபடி. இது சூக்குமை .வாக்கின் நிலையாகும். அபரம் மற்ற வாக்குளின் நிலையாகும்.

உள்ள அருணோ தயத்தெழும் ஓசைதான்
தெள்ளும் பரநாத தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன ஐங்கலைக் கொன்றாம் உதயமே - திருமந்திரம்

தேவர் பிரான்திசை பத்துத யஞ்செய்யும்
மூவர் பிரானென முன்னொரு காலத்து
நால்வர் பிரான்நடு வாயுரை யாநிற்கும்
மேவு பிரான்என்பர் விண்ணவர் தாமே - திருமந்திரம்

பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை
மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்குந் திருவுடை நந்தியென்
கையிருள் நீங்கக் கலந்தெழுந் தானே - திருமந்திரம்

தனிச்சுட ரெற்றித் தயங்கிருள் நீங்க
அணித்திடு மேலே யருங்கணி யூறல்
கனிச்சுட ராம்நின்ற கயிலையில் ஈசன்
நனிச்சுடர் மேல்கொண்ட வண்ணமு மாமே - திருமந்திரம்

நேரறி வாக நிரம்பிய பேரொளி
போரறி யாது புவனங்கள் போய்வருந்
தேரறி யாத திசையொளி யாயிடும்
ஆரறி வாரிது நாயக மாமே - திருமந்திரம்

மண்டலத் துள்ளே மலர்ந்தெழும் ஆதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடும்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே - திருமந்திரம்

இந்த ஆதித்தனை உடலில் காணவேண்டும்.

நாபிக்கண் ணாசி நயன நடுவினுந்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே - திருமந்திரம்

இந்தச் சிவாதித்தனேதான் ஆன்மா, சிவசக்தி என்றெல்லாம் வழங்கப்படுகிறது.

அன்றிய பாச இருளுமஞ் ஞானமும்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்று மிருசுட ராம்அரு ணோதயம்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே - திருமந்திரம்

கடங்கடந் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றதும் அப்பரி சாமே - திருமந்திரம்

தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்கும்
தானே யயன்மா லெனநின்று தாபிக்கும்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே - திருமந்திரம்

ஆறு ஆதாரங்களிலும் ஐந்து மூர்த்திகளும் உளர்; மூன்று சுடர்களுமுள்ளன; பஞ்சபூத நிலைகளும் உள்ளன.

தெய்வச் சுடரங்கி ஞாயறுந் திங்களும்
வையம் புனல்அனல் மாருதம் வானகஞ்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க் கிடமிடை யாறங்க மாமே - திருமந்திரம்

குமுத சகாயன் குணம்

குமுதம்: அல்லிப்பூவிற்குப் பெயர்; இது மாலையில் மலர்வது பற்றிச் சந்திரனுக்குகந்த புஷ்பமாயிற்று. சந்திரன் வீரியத்திற்கும் ஜீவனின் சாந்த ஒளிக்கும் காரணமாகும். இவனது திசை வடக்கைக் குறிக்கும் இடக்கண் பக்கமாகும். இங்கு உணர்வுதித்துச் செயல்படுவதே உத்திராயண புண்ணிய காலமாகும். பௌதிகச் சூரியனல்லவென்பதை அறியவும். அறிவுறுவமான சூரியன் ஈசான திக்கில் விளங்குவதே சந்திரனின் பிராபல்யம் ஆகும். இப்பகுதியில் உணர்வு

பெற்றோர் காமக் குரோத லோப மோகங்களையும், சிற்றின்ப இச்சைகளையும் அடக்கத் திறம் பெற்றோராவர். முன்னர்க் காமக் கழிவு செய்தபோது சந்திரன் ஒரு கலையுடையவனாய்ச் சுவாதிட்டானத்தில் பொருந்தியிருந்தான். இங்கே உணர்வு சிறப்புற்றபோது சிரசில் நாதமுழக்கம் உண்டாகும். நாத சம்மியத்தால் வாழ்நாள் நீடிக்கும். இந்த நிலையை ஆங்கிலத்தில் **'Speech centre'** என்பர். கிரியை வழிப் பூசிப்போர் புறத்தே வாகீஸ்வரன், வாகீஸ்வரி என்று ஈசானத் திக்கில் பூசிப்பர். இந்நிலை விளங்கப் பெற்றவர் சாந்தகுண சீலராயிருப்பர். சிரசில் ஒரு இன்பக் கிளுகிளுப்பும் பொருந்தும்.

விடாத மனம்பவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்கின் நாதங் கொளுவிக்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே - திருமந்திரம்

அமுதப் புனல்வரு மாற்றங் கரைமேற்
குமிழிக் குட்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமன்இல்லை நற்கலை நாள்இல்லை தானே - திருமந்திரம்

உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராநலங்
கண்ணாற் றொடெசென்று கால்வழி மாறுமே - திருமந்திரம்

இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலை

	பெயர்		நிலை
1.	அகரம் (மேதை)	- -	உந்தி
2.	உகரம் (அர்க்கீசம்)	- -	ஹருதயம்
3.	மகரம் (விஷம்)	- -	கண்டம்
4.	விந்து	- -	புருவமத்தி
5.	அர்த்தசந்திரன்	- -	நடுநெற்றி
6.	நிரோதினி	- -	மேல்நெற்றி
7.	நாதம்	- -	சிரசு
8.	நாதாந்தம்	- -	சிரசு
9.	சத்தி		இவைகள் எல்லாம் சிரசின் மேல் நிமிர்ந்த சகஸ்ர தளத்தில் விளங்குபவை
10.	வியாபினி		
11.	வியோபரூபினி		
12.	அநந்தை		
13.	அநாகிருதை		
14.	நோதை		
15.	சமனை		
16.	உன்மனை		

உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி

உடலாகிய இயந்திரத்தில் தூல நிலையில் பொருந்தியுள்ள பிராணமய கோசம் இயங்கும் மூலாதாரமாகிய ஆறு ஆதாரங்களையும் காட்டி என்பதாகும்.

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி

என்னறிவில் புலப்படும்படியாக, தூலமான ஆறு ஆதாரங்களையும் உருவ, அருவ, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களையும் காட்டியருளியும், அதனால் இன்பமடையச் செய்தும், என்பது.

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்தி

புரியட்ட காயம் என்பது சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் பொருந்திய சூக்கும உடலுக்குப் பெயர். இது தெரியவேண்டுமானால் முகத்தின்முன் ஒரு முழ அளவுள்ள மனமண்டலம் (உள்ளத்தின் சோதி) விளங்கவேண்டும். இது புலப்பட்டு அவ்வறிவு பெற்றால், எங்கெங்கும் உள்ள மக்கள் செயலை இருந்த இடத்தில் நினைத்தபோதே அறியும் ஆற்றல் கிட்டும். மக்கள் இவ்வெட்டின் காரியத்திலீடுபடுவதை, அறிவதைக் காணும் திறனை உண்டாக்கி கொடுத்து -என்றபடி.

கருத்தினில் கபால வாயில் காட்டி, இருத்தி

மனத்தின் ஆற்றலால் மர்மப் புழையைக் கடந்து, ஊர்த்துவ சகஸ்ரதளம் பெற்று, அங்கு என்னை நிலைபெறும்படி செய்து (சிவராஜயோக சமாதியிருத்தி)...

முத்தி இனிதெனக்கு அருளி

தேகங் கடந்து சிவசாதாக்கியத்தில் பொருந்திய அழியாத நிலையைச் சிவானந்தம் பெற்றுய்யுமாறு எனக்களித்து...

என்னை அறிவித்து

ஆன்ம சொரூபம் சுயம்ஜோதியானது. அது மனம், புத்தி, அகங்காரம், தேகோபாதைகள் யாவும் கடந்து விளங்கும் அகண்ட அறிவு நிலையாகும். அப்படிப்பட்ட நிலையை எனக்கு அறிவித்து...

எனக்கு அருள் செய்து

மேலே கண்டவைகளெல்லாம் எனக்கு உனதருளால் கிடைக்கச் செய்து...

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன

அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி

ஆன்ம பரிபக்குவத்தில் உயர்நிலை அடைகின்ற இரகசிய நெறியின் பல நுட்பங்கள் இந்த வரிகளிலே பொதிந்துள்ளன. இந்த அடிகளும் இவற்றைத் தொடர்ந்து வருகின்ற அடிகளும், அநுபவ ஞான முதிர்ச்சி பெற்ற பல பெரியோர்களை மெய்ம்மறக்கச் செய்த அருங்கவி மொழிகளாம். இவற்றின் கவிப்பண்பு ஒருபுறம் இருக்க, இவை கூறி விளக்குகின்ற ஆன்ம இரகசியங்கள், பல்லாயிரம் ஆண்டுகளாக இமயமலை முதல் பொதிகை மலை ஈறாகக் குகைகளிலும், வனக் குடில்களிலும் வதிந்து, பேரின்பத்தைத் துய்த்துப் பிறரையும் துய்க்க வைத்த மாபெரும் சித்தர்களின், அநுபவ ஞானக் களஞ்சியங்களாம். எனவே, இந்த வரிகளை அனுபவ ஞானம் பெற்ற சிவயோகி இரத்தின சபாபதியார் தந்துள்ள விளக்கத்தின் வாயிலாகக் காண்பது சிறப்புடையதாகும். அந்த விளக்கத்தை அப்படியே கீழே தருகின்றேன்.

"அநாதி காலந்தொட்டு இடையறாது வரும் பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாகிய வினைகளையெல்லாம் (செயல்படாமல்) வேரோடு பறித்து எறிந்து, வாக்கினாற் சொல்லுதற்கும், மனத்தினால் நினைத்ததற்கும் எட்டாத, மனம் தொழிற்படாத மௌன நிலையை நிலைநிறுத்தி, (அதனால்) அடியனது சிந்தனையினைத் தெளிவுபெறச் செய்து, அறியாமை அறிவு என்ற இரண்டிற்கும் ஆன்மாவே பிறப்பிடம் என்று வைத்து, அடியேன் செவியில் திருவருட்பேற்றைத் தரும் சிவானந்த மாவெள்ளமாகிய நாதவொலியால் அடியேனை மூழ்கும்படி செய்து, வரம்பு இல்லாத சிவனாந்த சுகத்தை (அடியேனுக்கு) வழங்கிப் பிறவித் துன்பத்தை வேரோடு அறுத்துத் திருவருள் நெறியினைக் காண்பித்து...

விளக்கம்:

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

முன்னை வினையின் முதல் அசுத்த மாயையிலும், சுத்தாசுத்த மாயையிலும் உள்ளது. அசுத்த மாயை ஆன்ம தத்துவம் இருபத்து நான்கிலும், சுத்தாசுத்தம் வித்தியாதத்துவம் ஏழிலும் பொருந்தியே, தேகம் எடுக்க காரணமாக உள்ளன. பக்குவான்மாக்களுள், பண்டையப் பிறவிகளில் சரியை, கிரியை, யோக நெறிகளைக் கடைப் பிடித்து வந்தவர்களே உண்மையான ஞானயோகத்திற்குத் தகுதி பெறுகின்றனர்.

யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம் பேரன்பான்
தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே

- தாயுமானவர்

இங்கு யோகம் என்பது ஹடயோகம் அல்ல. மந்திர சாதனத்தால் வாசியோகத்தால் அடையும் யோகமேயாகும்.

காலையுயிர் என்னுங் கலதிகள் சொற் கேளாமல்
சீலமுடன் எம்மைத் தெளிந்துகொள்வ தெந்நாளோ?

- தாயுமானவர்

பாவனையால் இறைவனையடைய முடியாது.

வான்காண வேண்டின் மலையேறல் ஒக்கும் உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே

- தாயுமானவர்

கிரியை வழியால் இறைவனை அடைய முடியாது.

காணுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே

- திருமந்திரம்

தன்னை யறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற் குபாயம் பராபரமே

- தாயுமானவர்

ஞானயோகத்தில் தன்னுண்மை ஒளிவடிவு என்று அறிந்தபோது அருள்வயப்பட்டவராகின்றனர். சிவதத்துவம் திடப்படுகிறது. அதனால் இருள் கெடுகின்றது. இருள் கெட்டொழிந்தபோது, வினைக்குக் காரணமான காரண சரீரம் அழிந்துவிடுகிறது. உருவ மனம் அழிந்தவர்க்குக் காரண சரீரம் அழிந்து விடுகிறது. தேகங்கடந்து அறிவொளியால் நிற்பவர்க்கு முன்னை வினையாகிய மருள் முதல் அகற்றப்பட்டுவிடுகிறது.

வாக்கும் மனமும் உள்ளவரையில் சிரசில் நாதமுழக்கம் என்ற நாதம் இருந்துகொண்டிருக்கும். அந்நிலையில் காண்போன், காட்சி, காணப்படுபொருள் மூன்றும் விளங்கிக்கொண்டேயிருக்கும். நாதாந்தம் சென்றபோது, திரிபுடி என்ற இம் மூன்றும் அற்று, அகண்டத்தில் நிற்கக்கூடும். அதனால், வாக்கும் மனமும் இல்லா மனோலயம் என்று கூறப்பட்டுள்ளது.

கற்றகலை யால்நிலைதான் காணுமோ காண்பதெல்லாம்
அற்றஇடத் தேவெளிஆம் அன்றோ பராபரமே
நேரே நினதுஅருள்என் நெஞ்சைக் கவரின்ஒன்றும்
பாரேன் சுகமும் படைப்பேன் பராபரமே
வாதனைவிட்டு உன்அருளின் மன்னின் அல்லால் வேறும்ஒரு
சாதனைதான் உண்டோநீ சாற்றாய் பராபரமே
ஒப்புயர்வொன் றின்றி ஒலிபுகா மோனவட்டக்
கப்பலுக்குஆம் வான்பொருள்நீ கண்டாய் பராபரமே
சிந்தனைபோய் நான்எனல்போய்த் தேக்க இன்ப மாமழையை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே

- தாயுமானவர்

உரையிறந்தால் உன்னு முணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற தேவை - வரைபெருக
வாசிப்ப தும்நாவால் வாழ்த்துவதும் நாடகமாய்ப்
பூசிப்ப துஞ்சுத்தப் பொய்

- சிவபோகசாரம்

அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி

ஆன்ம பரிபக்குவத்தில் உயர்நிலை அடைகின்ற இரகசிய நெறியின் பல நுட்பங்கள் இந்த வரிகளிலே பொதிந்துள்ளன. இந்த அடிகளும் இவற்றைத் தொடர்ந்து வருகின்ற அடிகளும், அநுபவ ஞான முதிர்ச்சி பெற்ற பல பெரியோர்களை மெய்ம்மறக்கச் செய்த அருங்கவி மொழிகளாம். இவற்றின் கவிப்பண்பு ஒருபுறம் இருக்க, இவை கூறி விளக்குகின்ற ஆன்ம இரகசியங்கள், பல்லாயிரம் ஆண்டுகளாக இமயமலை முதல் பொதிகை மலை ஈறாகக் குகைகளிலும், வனக் குடில்களிலும் வதிந்து, பேரின்பத்தைத் துய்த்துப் பிறரையும் துய்க்க வைத்த மாபெரும் சித்தர்களின், அநுபவ ஞானக் களஞ்சியங்களாம். எனவே, இந்த வரிகளை அனுபவ ஞானம் பெற்ற சிவயோகி இரத்தின சபாபதியார் தந்துள்ள விளக்கத்தின் வாயிலாகக் காண்பது சிறப்புடையதாகும். அந்த விளக்கத்தை அப்படியே கீழே தருகின்றேன்.

"அநாதி காலந்தொட்டு இடையறாது வரும் பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாகிய வினைகளையெல்லாம் (செயல்படாமல்) வேரோடு பறித்து எறிந்து, வாக்கினாற் சொல்லுதற்கும், மனத்தினால் நினைத்ததற்கும் எட்டாத, மனம் தொழிற்படாத மௌன நிலையை நிலைநிறுத்தி, (அதனால்) அடியனது சிந்தனையினைத் தெளிவுபெறச் செய்து, அறியாமை அறிவு என்ற இரண்டிற்கும் ஆன்மாவே பிறப்பிடம் என்று வைத்து, அடியேன் செவியில் திருவருட்பேற்றைத் தரும் சிவானந்த மாவெள்ளமாகிய நாதவொலியால் அடியேனை மூழ்கும்படி செய்து, வரம்பு இல்லாத சிவனாந்த சுகத்தை (அடியேனுக்கு) வழங்கிப் பிறவித் துன்பத்தை வேரோடு அறுத்துத் திருவருள் நெறியினைக் காண்பித்து...

விளக்கம்:

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

முன்னை வினையின் முதல் அசுத்த மாயையிலும், சுத்தாசுத்த மாயையிலும் உள்ளது. அசுத்த மாயை ஆன்ம தத்துவம் இருபத்து நான்கிலும், சுத்தாசுத்தம் வித்தியாதத்துவம் ஏழிலும் பொருந்தியே, தேகம் எடுக்க காரணமாக உள்ளன. பக்குவான்மாக்களுள், பண்டையப் பிறவிகளில் சரியை, கிரியை, யோக நெறிகளைக் கடைப் பிடித்து வந்தவர்களே உண்மையான ஞானயோகத்திற்குத் தகுதி பெறுகின்றனர்.

யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம் பேரன்பான்
தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே

- தாயுமானவர்

இங்கு யோகம் என்பது ஹடயோகம் அல்ல. மந்திர சாதனத்தால் வாசியோகத்தால் அடையும் யோகமேயாகும்.